★ தனி இதழ் 1 அணா ★ இலங்கைக்கு 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் — அரசியல் இரு நெடுஞ்செய்யன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

காய்கறிகள் பயிரிடுவதற்கு புதிய இயந்திர சாதனம்!

எக்காலத்தில், ஏழு வரிசைகளில் காய்கறி விதைகளை விதைப்பதற்கான புதியதொரு இயந்திர சாதனம் ஒன்றை, சஞ்சாவி லுள்ள ஹெரோவோரோட் விவசாயப் பண்ணை இயந்திர உற்பத்தி நிலையத்தைச் சேர்ந்த எஞ்சினியர்கள் குழு ஒன்று உருவாக்கி யுள்ளதாம்!

25 வகை காய்கறிப் பயிர்களுக்கு விதை விதைப்பதற்கு இந்த இயந்திரம் பயன்படும்; 'எஸ். ஓ. கே.-7' எனப்படும் இந்த இயந்திரத்தைக்கொண்டு 10 மணி நேரத்திற்குள், 12½ ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் விதை விதைக்க முடியுமாம்!

மலர் 4] சென்னை: புரட்டாசி 19உ வியாழன் (4—10—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 20உ வெள்ளி (5—10—56) [இதழ் 99

'குரங்குகளே! காலிகளே! மிருகங்களே!'

'என்னிடமா காட்டுகிறீர்கள் கருப்புக் கொடி?'

'ஒழித்துக்கட்டிவிட என்னால் முடியாதா?'

'உலகெலாம் சென்றேன்—உபசாரம் பெற்றேன்; உங்களுடைய கோபம் என்னை என்ன செய்யும்?'

பதறுகிறார்! கதறுகிறார்! மிரட்டுகிறார்!

குஜராத்தில் பண்டித நேரு பட்டபாடு

'உரிமையை அழிப்பவர் உலகப் புகழ்பெற்றாலும் விடமாட்டோம்! விடமாட்டோம்!'

குசராத் மாணவர்கள் முழக்கம்

பேசுவதற்கு விடவில்லை! ஏசல் கேட்டனர்!

போலீஸ் வஜாயம் காப்பளித்தது பண்டிதருக்கு!

பலப் பரீட்சையில் பண்டிதருக்குப் படுதோல்வி

ஆமதாபாத், அக். 3—

"தேசத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் நான் பார்த்திருக்கிறேன். இதுபோன்ற ஒரு காட்சியை என் வாழ்நாளில் என்றுமே நான் கண்டதில்லை. இந்த மனப்போக்கு எவ்வளவு ஆபத்தானது! இந்தக் குரங்குகள் நடனமாடுவதைப் பாருங்கள்! நீங்கள் இதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

"இது, காட்டில் அனுசரிக்கப்பட்டுவரும் சட்டமாகும்; முழுதும் அறிவிலிருந்து விலகியச் செயலாகும். இக்கூட்டத்தின் ஒரு மூலையில் (கூட்டத்தின் ஒரு மூலையில் தீவிரமாக முழங்கிக் கொண்டிருந்த எதிர்ப்பாளர்களைக் காட்டி) மிருகக் காட்சிசாலை இருக்கிறது. இங்கு ஒரு 'தமாஷா'வை நடித்துக் காட்டுகிறீர்கள்.

"நீங்கள் இத்தகைய ரௌடித்தனத்தினால் உங்கள் கருத்தை எனக்கு உணர்த்திவிடுவீர்களா?

"இதைப் புரட்சி என நீங்கள் எண்ணுகிறீர்கள்; நான் உங்களில் பலரைவிட மூன்று மடங்கு வயது அடைந்திருப்பவன். நான் புரட்சியில் பிறந்த குழந்தை. இதை வெளிநாட்டவர் கண்டால், உங்களைக் குறித்து அவர்கள் நல்ல முறையில் கருத மாட்டார்கள்.

"சில நூற்றுக்கணக்கானவர்கள் கூடி இத்தகைய ரௌடித்தனத்தைக் கையாண்டு கூட்டத்தைக் கெடுக்க முயலுகிறீர்கள் என நான் நம்புகிறேன். இதுபோன்ற தோல்விகள் ரஷ்யாவில் கிடையாது. இதுபோன்று சீனாவில் நடைபெற்றால் என்ன நேர்ந்திருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்களா? அண்மையில், போலந்தில் என்ன நடைபெற்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?"

—குசராத் பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பிரதமர் நேரு, ஆத்திரம் பொங்கி மேற்கண்டவாறு எல்லாம் வசைபாடி இருக்கிறார்.

"இங்கு காணப்படுகின்ற கருப்புக்கொடிகளை அகற்ற முடியாது என்று எண்ணுகிறீர்களா? இங்கு இருக்கிற விஷமிகளை அப்புறப்படுத்த முடியாது என நம்புகிறீர்களா?"

எனக் கூட்டத்தினரை நோக்கிக் கடுங்கோபமாகக் கேட்டார் பிரதமர்.

'அது முடியாது' எனக் கூட்டத்திலிருந்த மாணவர்கள் கூச்சலிட்டனர்.

அவர் மேலும், 'இந்த ரௌடித்தனத்தினால் நான் பணிந்துவிடவேன் என்று எண்ணுகிறீர்களா?' என்றும் கூட்டத்தினரைக் கேட்டார்.

'புதிய இந்திய திரைப்படம் இன்று முதல் ஒரு நிமிஷத்துக்குள் ரை—

முறைக்கு வரப்போகிறது' என பண்டிதர் சொல்லி முடிப்பதற்குள், 'அது கிடைபெறுது' எனக் கூட்

(4-ம் பக்கம் பார்க்க)

சாமி படுகொலை எதிரொலி:

மற்றொருகத்தி கிடைத்தது; மேலும் ஒருவர் கைது

தஞ்சாவூர், அக் 4—தஞ்சாவூர் தொழிலாளர் தலைவர் கே. வி. கே. சாமியைப் படுகொலை செய்ய உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் இன்னொரு கத்தியை நேற்று போலீசார் கைப்பற்றினர். இரத்தக் கறைபடிந்த தலைமுடிகளும் கிடைத்தன.

கொலைபற்றித் துப்பு விசாரித்து வரும் இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு அவர்கள் நேற்று தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே தெற்கு வீதியில் ஒரு வீட்டில் ஒளிந்திருந்த ஒருவரைக் கைது செய்தார். அவர் கொடுத்த தகவலின் பேரில் இரத்தக்கறை படிந்த தலைமுடிகளும் ஒரு பிச்சுவாக் கத்தியும் கைப்பற்றப்பட்டன. தெற்கிரதவீதியும், எற்கனவே கைதான கொலை டாலரும் கொடுத்த தகவலின் பேரில் முக்காலி, ஏர், மண் முத்தாறு ஆகிய இடங்களுக்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு போய் புலன் விசாரணை நடத்தி வருகிறார்.

—'தினத் தந்தி': 4-10-56

தமிழகமெங்கும் அக். 15-ல் அறப்போர்

'தமிழரசுக் கழகம் நடத்தும்'

ம. பொ. சிவஞானம் அறிவிப்பு

சென்னை, அக். 3—

"ஆந்திராவில் உள்ள திருத்தணி, சித்தூர், பொதட்டூர்பேட்டை போன்ற தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க—எல்லைக் குழு அமைக்கப் போராட்டம் நடைபெற்றது; அப் போராட்டம், வட எல்லைப் பாதுகாப்புக் குழுவின் ஆதரவில் நடத்தப்பட்டது.

"அடுத்த போராட்டம் அக். 15-ந் தேதியன்று நடைபெறும். இந்தப் போராட்டம் தமிழ்நாடு முழுவதும்—சித்தூர் உட்பட நடைபெறும். இந்தப் போராட்டம் சென்னை அரசாங்கத்திற்கும், டில்லி அரசாங்கத்திற்கும் ஆந்திர அரசாங்கத்திற்கும் புத்தி புகட்டவே நடத்தப்படுகிறது."

"போராட்டத்தை எப்படி நடத்துவது என்பதை அக். 8-ந் தேதி அறிவிப்பேன். தமிழரசுக் கழகச் செயற் குழு, கிளைக் கழகங்களைக் கலந்தாலோசித்து இதுபற்றி முடிவு செய்வேன். இதற்காக நானும், தோழர் கே. விநாயகமும் நாளை சுற்றுப் பயணம் செல்கிறோம்."

என்று, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் தமிழரசுக் கழக ஆதரவில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் ம. பொ. சிவஞானம் அவர்கள் அறிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், அவரும், அவருடைய கழகமும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று குறிப்பிட்டுவிட்டுச் சொன்னார்:—

"இந்தப் போராட்டம் நிச்சயம் நடைபெறும்; பலாத்காரமோ, குழப்பமோ ஏற்படாதவாறு நடத்தப்படும். மீண்டும் 14-ந் தேதியன்று ஒரு பொதுக் கூட்டம் நடத்திப் பொதுமக்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும்.

"சென்ற போராட்டம் ஒரே இடத்தில் நடைபெற்றது; நடைபெறவிருக்கும் போராட்டம் தமிழகம் முழுமையிலும் நடைபெறும். என்னை முன்கூட்டியே கைதுசெய்தாலும் போராட்டம் நடைபெற்றே தீரும். தமிழரசுக் கழகத் தோழர்களே தயாராய் இருங்கள்! இந்த முறை வெற்றியில்லாமல் நாம் வீடு திரும்பப் போவதில்லை!

"நம்முடைய பிரச்சினையை சென்னை அரசாங்கம் ஒப்புக் கொண்டது; நேரு உறுதி தந்தார்; எதிர்க் கட்சியினர் வேண்டாமென்றே, கூடாது என்றே எதிர்க்கவில்லை.

"இந்தப் போராட்டத்தைப் பல எதிர்க் கட்சிகள் ஆதரித்து எழுதின; அது போன்றே இந்தப் போராட்டத்திற்கும் அவர்களின் தார்மீக ஆதரவு நிச்சயம் நமக்குக் கிடைக்கும்.

"சென்ற 6 நாள் போராட்டத்தில் சென்னை அரசாங்கம் திருந்தும்—செயல்படும் என்று நம்பினேன்; இதைப் பயன்படுத்திக் கொண்டாவது அவர்கள், டில்லியை வற்புறுத்தியிருக்கலாம்.

"ஆந்திர அமைச்சர்; சென்னை அழுதது; நான் டில்லியை அணுகப் போகிறேன்.

"எனக்கு வேண்டியது—ஆந்திரக் கமிஷன் 'உண்டு, இல்லை' என்ற பதில்தான்.

"நிச்சயமாகச் சொல்கிறேன் எல்லைக் குழு அமைக்காமல் தேர்தல் நடைபெற விடமாட்டோம்; சேருவும் பிர

(4-ம் பக்கம் பார்க்க)

ஏ. வி. பதி

தஞ்சை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளரும், தஞ்சாவூர் நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் ஏ. வி. பதி தாக்கப்பட்டது காரணமாக ஏற்பட்ட வெட்டுக் காயம் ஆறிவருகிறது. அவர் உற்சாகமாகக் காணப்பட்ட போதிலும், இரத்தம் குறைவு பட்டதின் காரணமாக மிக மெலிந்து காணப்படுகிறார்.

இவ்வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட வைத்தீஸ்வரன், துரைராசு, ஜெகந்நாதன், மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சரண் அடைந்த அருணாசலம், ஜெகு, குருசாமி ஆகிய அறுவரும் ஜாமீனில் விடப்பட்டனர். அவர்கள்மீது இ. பி. கோ. 147 148, 324 ஆகிய செக்ஷன்களில் வழக்குப் பதிவாகியிருப்பதாகத் தெரிகிறது.

இன்று மாவட்ட உதவிச் செயலாளர் மன்னார்குடி ப. நாராயணசாமி, செயலாளர் எஸ். ஆர். இளங்கோ, குடந்தை கீழையூர், எஸ். ஏஸ். கோவிந்தசாமி, மன்னை சுப்பிரமணியம் (திருத்துறைப் பூண்டி) எ. தர்மலிங்கம் (முத்துப் பேட்டை), பேராவூரணி அடைக்கலம் முதலியவர்கள் தஞ்சாவூர் வந்திருக்கின்றனர்.

குறிப்பு:—'தினத் தந்தி'யில் வந்திருப்பதுபோல, ஜெகந்நாதன் பதி தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது தவறாகும்; பணத் தகராறு என்று குறிப்பிட்டிருப்பதும் தவறாகும்.

'நேருவுடன் கலந்து பேசுவதால் எவ்வித பலனும் ஏற்படாது'

பண்டிதர் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

ஆமதாபாத், அக். 2—

'மகாகுஜராத்' கோரிக்கை பற்றி பண்டித நேரு, பரீஷத்தின் தலைவர்களுடன் கலந்து பேச விரும்பினார்; பரீஷத் தலைவர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டது.

—ஆனால், பண்டித நேருவுடன் கலந்து பேசுவதில் எந்தவிதப் பலனும் ஏற்படாது என்ற கருதுவதால், அவருடன் பேசுவதற்குப் பரீஷத்தின் தலைவர்கள் மறுத்து விட்டனராம்!

எனவே, இருதரப்பினரும் கலந்து பேசுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் நடைபெறவில்லை.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—10—'56 புதன்

காமராசர் ஒப்புதல்

★

மொழிவழி மாகாண அமைப்புக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, இரு மொழி, மும்மொழி மாகாணங்களை உருவாக்கும் ஏற்பாட்டிற்குக் காங்கிரஸ் கட்சி, தன்னை ஒப்படைத்துக்கொண்டு இருக்கிறது. இப்புதிய போக்கை அறிவிக்கும்வகையில், சாத்தியமான இடங்களில் இரு மொழி மாகாணங்களை அமைக்கவேண்டும் என, சிபாரிசு உருவில் தீர்மானம் ஒன்றையும் காங்கிரஸ் கட்சி நிறைவேற்றி இருக்கிறது. இந்தப் புதிய கருத்து மாறுதலைக் குறிப்பிடும் தீர்மானத்தைத்தான் அமிர்தசரசுத் தீர்மானம் எனவும் கூறிவரப்படுகிறது.

முதலமைச்சர் காமராசர் மீது தங்களுக்குள்ள கட்சி உட்பகையை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள இந்த அமிர்தசரசுத் தீர்மானத்தை ஒரு துணையாகக் கொண்டனர் இராச கோபாலாச்சாரியாரும், அவர்தம் சீடர்களான நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வகையறாக்களும். முதலமைச்சர் காமராசரைப் பதவியை விட்டு வெளியேற்றிப் பழிவாங்க வேண்டும் என்ற ஆச்சாரியார் கும்பலின் பழிவாங்கும் படலத்தில், தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்து முக்கிய இடம் பெற்றது. கேரளமும் சென்னையும் முதற்கண் ஒன்றுபட்டு, காலப்போக்கில் கன்னடத்தையும் இணைக்க முயற்சிப்பது என்பதுதான் ஆச்சாரியார் கும்பல் பிரச்சாரம் செய்துவந்த தட்சிணப் பிரதேசத்தின் உள்ளடக்கமாகும். அந்தப் பிரச்சாரத்தில் ஆந்திர இணைப்புக்குச் சிறப்பு அளிக்கப்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு ஆந்திர இணைப்புக் குறித்து அலட்சியமாகவே ஆச்சாரியார் கும்பல் இருந்துவந்திருக்கிறது.

தட்சிணப் பிரதேசத்தை உருவாக்க வேண்டும் எனத் தீவிரமாகப் பேசிவந்த ஆச்சாரியார் கும்பல், ஆந்திரத்தை அலட்சியப்படுத்திவிட்டுக் கேரளத்தையும் கன்னடத்தையும் மட்டுமே சென்னையுடன் உடனடியாக இணைப்பதற்கு முயற்சித்து வந்ததில் கருதத்தக்கப் பொருள் ஏதாவது கண்டிப்பாக இருந்தாக வேண்டும் என்பதே பெரும்பாலோருடைய நம்பிக்கையாகும். காமராசர் கும்பலுக்கும் அந்தச் சந்தேகம் பலமாக இருந்துவந்தது.

'கேரளமும் சென்னையும் மட்டும் இணைந்த குறைந்த பட்சத் தட்சிணப் பிரதேச அமைப்பை முதற்கண் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்' என நிதி அமைச்சர் சுப்பிரமணியம் விரும்புகிறார். அக்கருத்தே ஆச்சாரியார் பெற்றெடுத்த ஒன்றாக இருப்பதால், நிதி அமைச்சரின் விருப்பத்திற்கு ஆச்சாரியாரின் ஒப்புதல் நிச்சயமாக இருக்கத்தான் இருக்கிறது எனக் கூறத்தேவையே இல்லை.

கேரளமும் சென்னையும் ஒரே ஆட்சியமைப்பாக ஆக்கப்படுவதின்மூலம், பல நன்மைகளை சென்னை பெறக்கூடும் என நிதி அமைச்சர், தனது இணைப்பு வாதத்திற்கு நியாயம் காட்டி இருக்கிறார். கிடைக்கக்கூடிய பல நன்மைகளில் கேரளத்தில் உற்பத்தியாகும் காட்டாறுகளின் நீரை சென்னை பயன்படுத்தி இலாபம் பெறக்கூடும் என்பதும் முக்கியமானதாகும்.

ஆச்சாரியார் கும்பல் கோரும் இணைப்பின் உள்ளமைப்பை அப்படியே தாம் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றக் கருத்தைத் தெளிவாகப் பிறர் அறிந்து கொள்ளும் வகையில், முதலமைச்சர் காமராசர் கர்நூலில் பேசி இருக்கிறார். அதாவது கேரளத்தையும், சென்னையையும் இணைப்பதற்கு முதலிடம் தந்து நிதிஅமைச்சர் தட்சிணப் பிரதேச அமைப்பை வலியுறுத்துவது போன்றே, ஆந்திரமும், சென்னையும் இணைந்து உருவாக்கப்படும் இரு மொழி அமைப்பான தட்சிணப் பிரதேச ஏற்பாட்டை வலியுறுத்த முதலமைச்சர் காமராசர் முனைந்திருக்கிறார்.

ஆந்திரமும் சென்னையும் இணைந்து ஒரு ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டால், கோதாவரித்தண்ணீரை சென்னை மக்கள் பயன்படுத்திக் கொள்ளுவது சாத்தியமாகும் என, தம் வாதத்தை வலியுறுத்தக் காமராசர் நியாயமும் காட்டுகிறார்.

கேரளத்தையும் சென்னையையும இணைத்துத் தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படவேண்டும் என ஆச்சாரியார் கும்பல் கோருகிறது. ஆனால் ஆந்திரத்தையும் சென்னையையும் இணைத்துத் தட்சிணப்பிரதேசம் அமைக்கப்பட வேண்டும் என காமராசர் கும்பல் கோரக் கிளம்பி இருக்கிறது.

பொதுவாகத் தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை இரு சாராரும் வரவேற்றபோதிலும, அத்தகு அமைப்பில் இடம்பெற வேண்டியது கேரளமா, ஆந்திரமா என்பதில் இரு சாராரிடையேயும் கருத்து மாறுபாடு இருக்கிறது. இக்கருத்து மாறுபாடுக்குரிய காரணம் கண்டறியத்தக்கது.

தட்சிணப் பிரதேச ஏற்பாட்டின் உள்ளமைப்பில் கருத்து மாறுபாடு இருசாராரிடத்திலும் இருந்தபோதிலும், இரு மொழி அமைப்புக் கோட்பாட்டைத் தாம் விரும்பாதவர் போல் இதுவரை முதலமைச்சர் காமராசர் பேசி வந்தது, தமிழ் மக்களை ஏமாற்றப் பேசி வந்தப் பேச்சேயாகும் என்ற உண்மை இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இவ்வளவு காலம் கழித்த பிறகாவது, இவ்வுண்மை வெளியாயிற்றே என்பதில் நாம் மகிழ்கிறோம்.

பொன்விழா

ரூ. 100கோடி செலவில் தொழில் வளர்ச்சித் திட்டம்

ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை தருவதற்கு வாய்ப்பு

உ. பி. அரசாங்க விசாரணைக் குழு சிபாரிசு

உத்தரப் பிரதேச அரசாங்கம், மாகாணத்தில் புதிய கைத்தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்காகச் சிபாரிசுகளைச் செய்யுமாறு விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது; அக்குழு, தனிப்பட்டத் தொழில் முயற்சியின் மூலமாக ரூ 100 கோடிக்குக் கைத்தொழில் விரிவுத் திட்டமொன்றை சிபாரிசு செய்திருப்பதோடு, இத்திட்டம் 1,00,000 பேர்களுக்கு வேலை அளிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

துங்கபத்திரா கால்வாய்த் திட்டம்

ரூ. 20 கோடி செலவாகும்

துங்கபத்திரா, அக். 2—

துங்கபத்திரா அணைக்கட்டுக்கு அருகிலுள்ள எஸ்பெட்டில், துங்கபத்திரா கால்வாய் வெட்டும் வேலை துவங்கிவிட்டதாம்; இதற்காக ரூ 20 கோடி செலவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

உணவுப் பஞ்சத்தைப் போக்கி, உற்பத்தியை இரண்டு இலட்சம்டன் அதிகரிக்கவே இந்தக் கால்வாய் கட்டப்படுகிறதாம்.

கதவு அலங்கரிப்புக்கு ரூ. 10,000 செலவு!

மைசூர் மாநிலத்தின் புதிய சட்டசபைக் கட்டிடத்தில், ஓர் கதவுக்கு, சந்தண மரத்தினால் ஒட்டு வேலை அலங்காரம் செய்யப்பட்டதாகவும், அதற்காக மொத்தம் ரூ 10,000 செலவு செய்யப்பட்டதாகவும் சட்ட அமைச்சர் இராமச்சந்திர ராவ் கூறியுள்ளார்.

நிலமற்ற விவசாயிகளுக்கு நல்வாழ்வுத் திட்டம்

புதுடில்லி, அக். 3—

நிலமற்ற விவசாயிகளின் நல்வாழ்வை முன்னிட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ரூ. 3,70,000 செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைச் சேர்ந்த 12 மாநிலங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைவார்கள்.

பித்தளைப் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை

கும்பகோணத்தில் ஒரு நிலையம் நிறுவுவதற்குத் திட்டம்

பித்தளைப் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காகக் கும்பகோணத்தில் ஒரு நிலையம் நிறுவுவதென சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் ரூ. 5,63,046 கடன் அளித்துள்ளது.

இந்த நிலையத்திற்கு மூலப் பொருள்கள் வாங்குவதற்கும் எரி பொருள், மின்சாரம் போன்ற செலவினங்களுக்கும் ஆண்டுதோறும் ரூ. 17,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது'

மூன்று ஆண்டுகளுக்கு இந்த நிலையத்தை அரசாங்கமே நிர்வாகம் செய்துவரும்; பின்பு இது, ஒரு தொழில் கார்ப்பொரேஷனாக மாற்றி அமைக்கப்படும்.

மூலப்பொருள்களை இந்த நிலையத்தில் சேகரித்துவைத்துத் தொழிலாளருக்கு வழங்குவதுடன், பித்தளைப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான புதுமுறைகளும் இந்த நிலையத்தில் மேற்கொள்ளப்படும்.

கொண்டாடி தமிழைப் போற்றினோம்

தமிழ்ச் சங்கம் தக்க பணியாற்றத் திட்டம்

ஆளுக்கொரு 'ரூபா' தருவீர்; அனைவரும் தமிழர் என்பதைக் காட்டுவீர்!

'ஒரு கோடி ரூபாய் நிதி திரட்ட விழைகிறேன்

தமிழர்கள் 'வெற்றி' தருவர்; நம்புகிறேன்

தமிழ்—தமிழர்—தமிழ்ச் சங்கம் குறித்து பி. டி. இராசன் பேருரை

"தமிழ்ச் சங்கத்தின் தலைவனாக நான் இருந்து பணியாற்றுவதை வரவேற்புரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"தமிழ் மொழி வளர ஒரு ஸ்தாபனம் வேண்டும்; அந்த ஸ்தாபனமாக இன்று மதுரைத் தமிழ்ச் சங்கம் இருக்கிறது. தமிழனது பெருமையை அவனுக்கு உணர்த்தவும், உலகுக்கு எடுத்துக் கூறவும் அந்தச் சங்கம் இன்றியமையாததாகும். பண்டையத் தமிழகத்தின் பெருமையான வாழ்வை இன்றையத் தமிழர்கள் பெற வேண்டும்; பெருமை குன்றாது வாழ வேண்டும் — வாயளவில் அல்ல — செயல் அளவில், அதற்குத் துணைபுரியத் தமிழ்ச் சங்கம் வேண்டும்

"சமீபத்தில் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா நடைபெற்றது; அந்தப் பொன் விழா சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

"ஒரு காலத்தில், சாதியால், மதத்தால் பிரிவுபட்ட தமிழன்—இன்று அரசியலால் பிரிவுபட்டிருக்கும் தமிழன், எல்லா வேற்றுமைகளையும் பிரிவுகளையும் மறந்து, எல்லோரும் தமிழன் என்ற உணர்ச்சியை ஏதாவது ஒரு சமயத்திலேனும் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பொன் விழா நடைபெற்றது. அது போலவே, சாதி—சமய—கட்சி வேறுபாடுகளை மறந்துவிட்டு, ஆண்—பெண் பேதமின்றி பலரும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்; ஆனால் ஏதோ ஓரிரண்டு சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன —'திருஷ்டிப் பரிகாரம்,' போல! அதுபற்றிக் கவலை கொள்ளத் தேவை இல்லை.

"உலகத்தில் தமிழருக்கு மட்டுமே மொழி வளர்க்கச் சங்கம் உண்டு. இந்தப் பெருமை ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளாகத் தமிழருக்கு இருந்துவரும் பெருமையாகும். ஆனால், இன்றுள்ள தமிழ்ச் சங்கத்தைக் கவனிக்க நாதி இல்லை.

"அந்தக் காலத்தில், சங்கத்தை வளர்க்கவும் காக்கவும் இராசாக்கள் இருந்தார்கள்; இன்று இல்லை ஆனாலும் நாம் அதைக் கைவிட்டு விடக்கூடாது. இன்று தமிழ்ச் சங்கத்தைக் காக்கக்கூடியவர்கள்—போற்றக்கூடியவர்கள் மக்கள் தான்!

"தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் பொறுப்பு மிகவுண்டு. ஆகவே தமிழர்கள், தமிழ்ச் சங்கத்தைக் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

"தமிழ்ச் சங்கத்தின் எதிர்கால வேலைகளுக்கான சில திட்டங்களை நாங்கள் தீட்டியிருக்கிறோம்; அதற்காக, ரூபாய் ஒரு கோடி வரையில் தேவைப்படுகிறது. தமிழ் மக்கள்—அவர்கள் பணக்காரர்களானாலும் ஏழைகளானாலும் — இந்தத் தொகையைத் தந்து உதவ வேண்டும் — ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம்! நான் இன்னும் சில மாதங்களில், ஒவ்வொரு ஊராகச் சென்று இந்தத் தொகையைத்திரட்டவிருக்கிறேன். அப்போது இந்த வேலூருக்கும் வருவேன்என்பதை இப்போதே கூறிவைக்கிறேன்."

"உண்மையிலேயே தமிழர்கள் தமிழ் நாடு வேண்டும் என்று கேட்கிறார்களா? தமிழை அவர்கள் உண்மையிலேயே காப்பாற்ற வேண்டுமென விழைகிறார்களா?—என்பதை, அப்போது தெரிந்துகொள்ளலாம் என்றிருக்கிறேன்."

என்று, 26-9-56ல் வேலூர் (வ. ஆ. மாவட்டம்) நகராண்மைக் கழக மண்டபத்தில் அண்ணா அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் வலை வீச்சுக்குப் பலி

அகாலிதளம் அழிகிறது?

அமிர்தசரஸ், அக். 2—

சீக்கியர்களின் மதம், கல்வி, கலாச்சார முன்னேற்றத்துக்காக மட்டுமே இனி அகாலி தளம் செயல்படுமாம்.

அரசியல் வேலைகளுக்குக் காங்கிரசுடன் சேர்ந்துபணியாற்றுமாம்.

மணிமுத்தாறு அணையில் வேலை நிறுத்தம்

அம்பாசமுத்திரம், அக். 1—

மணிமுத்தாறு அணைக்கு அருகில் ஏற்பட்டதோர் விபத்தில் காயமடைந்த கூலிகள், காலராவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கெனத் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் வார்டில் அனுமதிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து, காண்ட்ராக்டர்கள், கூலிகள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். நிர்வாக எஞ்சினீயர்கள் அங்கு விரைந்துள்ளதாகத் தெரிகிறது.

10 கோடி பேர் நன்மை பெறுவார்களாம்!

புதுடில்லி, அக். 2—

இன்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சமுதாய நலத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இப்போது இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் நான்கில் ஒரு பாகத்தினர்—அதாவது 10 கோடி பேர் இந்தத் திட்டத்தின் நன்மைகளைப் பெறுவார்களாம்.

பயனில்லையாம்!

மராத்தி மொழியைப் போதனா மொழியாகச் செய்ய வேண்டுமென்று புனா பல்கலைக் கழகம் முயன்றும் பயனில்லையாம்! கல்லூரிகள் போதிய ஆதரவு காட்டவில்லை என்று பேராசிரியர் ஹால்யால்கர் வெளியிட்டார்.

கழகத் தோழர்களின் கண்கள் குளங்களாக மாறியது!

மாவீரன் சாமியின் அனுதாபக் கூட்டத்தில் முன்னணித் தோழர்களின் மனமுருகும் பேச்சு

30—9—56-ல், சென்னை—வண்ணை கல்லறை மைதானத்தில் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் அனுதாபக் கூட்டத்தில், கழக முன்னணித் தோழர்கள் ஆற்றிய அனுதாபப் பேச்சுக்களின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

'சாமியின் உடலைத்தான் அழித்தனர் அவரது புகழை யாராலும் அழிக்க முடியாது'

★

கே. கோவிந்தசாமி

"திராவிடத்தின் உண்மை உழைப்பாளி ஒருவர், நாம் எதிர் பார்க்காத முறையிலே கொலை செய்யப்பட்டு மறைந்த சூழ்நிலை குறித்து நாமெல்லாம் வருந்துகிறோம். தோழர் சாமிக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு ஒரு கூட்ட மும்கூட்டி கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறோம் — சென்னையிலே! அதுபோலவே இன்று தமிழகத்தின் பெரிய நகரங்களிலெல்லாம், கிராமங்களிலெல்லாம் — பட்டி தொட்டிகளிலெல்லாம் கோடிக் கணக்கான தமிழர்கள் கூடியிருந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறார் கள்.

"உண்மையான இயக்க உழைப் பாளி—தான் கொண்ட கொள்கை நிறைவேறும்வரையில் அந்த ஒரே எண்ணத்தில் தன்னையே மறந்து தனக்கெனப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளமாட்டான். அத்தகு உண்மை உழைப்பாளி நம்மிடம் இருக்கிறான் என்றால், அவன் யாருடைய நலனுக்காக உழைக் கிறானே அந்த மக்கள்தான் அவனுக்காகக் கவலை எடுத்துக் கொண்டு, அலனுக்குக் காவலாளி கள்போல் பாதுகாப்புத் தரவேண் டும்.

"தோழர் சாமியைக் கொன்ற வர்கள் அவரது உடலைத்தான் அழிக்க முடிந்ததே தவிர, அவரது புகழை அழிக்க முடியவில்லை; அவ ரது புகழ் இன்றும் வாழ்கிறது நமது மக்களிடையே ஒற்றுமை யும், நல்ல பண்பும் இல்லை என்ற நிலையை மாற்றின தோழர் சாமியை—அத்தகு உண்மை உழைப்பாளியை யாரோ பேயர் கள், மிருகக் குணம் படைத்தவர் கள், மனித வர்க்கத்தை மட்டு மின்றி ஓரறிவு படைத்தப் புழு, பூச்சிகளைவிடக் கேடுகெட்டவர் கள்—கொலை செய்துவிட்டனர். அந்தத் தீய சக்தியை ஒழிக்க வேண்டுமென்றால் சாமி எந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டுக் கொலையுண்டாரோ, அந்தக் கொள் கைகளுக்காகப் பாடுபட்டு நாமும் சாமிகளாவோம் என்று இந்நேரத் தில் நாம் அனைவரும் சூளுரைத் துக்கொள்வோம்."

'கடமை உணர்ச்சி மிக்கவர்; கட்டுப்பாட்டை வளர்த்தவர்'

★

காஞ்சி-மணிமொழியார்

உடைந்த உள்ளத்தோடும், நடுங் கும் உடலோடும் நாம் இங்கு கூடி யிருக்கிறோம்.

"தோழர் சாமி ஏற்றுக்கொண்ட எந்தப் பணியிலும் என்னத்தனை குறையும் காணமுடியாது. அப் படிப்பட்ட நல்லதோர் பண்பாள ரைக் கயவர்கள் கொலை செய்த காரணத்தால் நாம் துக்கக்கடலிலே ஆழ்ந்திருக்கிறோம்.

"புகழேணியின் உச்சியிலே ஏறிச் சென்றார் என்பதுதான் அவர் கொலை செய்யப்பட்டதற் கான ஒரே காரணம். தங்களுக் கும் அவருக்குக் கிடைத்தது போன்ற புகழும் உயர்வும், பெரு மையும் வேண்டும் என்ற நப்பாசை யும், தங்கள் முன்னேற்றம்— வளர்ச்சிக்கு அவர் இடையூறாக இருந்தார் என்பதுந்தான் அதற்குக் காரணம். ஆனால் அவர்கள் நினைத் தது நிறைவேறிற்று என்றாவது இல்லை—அவருடைய புகழ் இவரு மட்டுமல்ல—அவரைப் பற்றிக் கேட்டறியாதார்கூட இதுகேட்டு துக்கத்திலாழ்ந்தனர். அவர் புக ழேணியின் உச்சியிலே ஏறிவிட் டார்; ஆனால், அவரைக் கொன்ற மற்றவர்களோ மக்கிப்போயிருக் கிறார்கள்.

"பொதுத் தொண்டிலே ஈடுபட் டிருக்கும் எல்லாருக்கும் பொது மக்களும் காவலாளிகளாக இருந்து, சர்க்காரும் பாதுகாப்பளிக்கவேண் டும். அப்படிப் பொதுமக்களாகிய நாமும், கொள்கைக்காக முன்னணி யில் வருகிற அனைவருக்கும் பாது காப்பு அளித்தால்தான் மேலும் மேலும் நமது பொதுத் தொண்டு வளரும்—வீரர்கள் வளருவர் எனக் கூறிக்கொண்டு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

'இயக்கத் தூண் சாய்ந்துவிட்டது'

★

என். சிவராத்தினம்

"மறைந்த தோழர் சாமி கடமை —கட்டுப்பாடு உணர்வுடன், அறிவு ஆற்றலுடன் கொள்கை வழி இயக் கத்தை நடத்திச் சென்ற மாவீரன். அவர் புகழேணியை எட்டிப் பார்த் துக்கொண்டிருந்த நேரத்திலே அவர் மீது பொறாமைகொண்டு அவரை ஒழித்துவிட வேண்டு மென்ற கெடு நினைப்புக்கொண் டோர் வெட்டி வீழ்த்திவிட்டனர்.

"தோழர் சாமி திராவிட இயக்கத்தின் சாதாரணத் தொண் டராக இருந்த போதே எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அப்போதிருந்தே அவர் நல்லதோர் உழைப்பாளியாகி, அசைக்க முடியாத இயக்கத் தூண் களுள் ஒன்றாக நிலைத்திருந்தார். எதிரிகளைக் களத்திலே நின்று வெற்றி பெற வேண் டிய வீரர்—கொள்கை உறுதி கொண்ட தீரர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். கட்சியின் கொள் கைக்காகப் போராடி, தன் உயிருக் குப் பாதுகாப்புத் தேடிக்கொள் ளாத அவரை நீயர் ஒழித்துவிட்ட னர். அத்தகுத் தீய சக்தியை இனிமேலும் நாம் வளரவிடக் கூடாது. தோழர் சாமி நம்மை விட்டுப் பிரிந்தார் என்றாலும், அவ ருடைய செயலாற்றும் திறனையால் நம்மைவிட்டுப் பிரியவில்லை—நம் முடனேயே இருக்கிறார் எனக் கூறிக்கொண்டு, அவரது மறைவு குறித்து நடைபெறும் இந்த அனு தாபக் கூட்டத்தில் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

மணப்பள்ளி :

27-9-56 இரவு 9 மணிக்கு ராமக்கல் லட்டம் மணப்பள்ளி திருவள்ளுவர் நாடக மன்றச் சார் பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திருத்துறைப்பூண்டி :

28—9—56ல் பஜனை மன்றச் செயற் குழுக் கூட்டம் நடை பெற்றபோது அனுதாபத் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

காட்டுப்பாடி ஊராண்மைக் கழக அவசரக் கூட்டம்

அனுதாபத் தீர்மானம்

1—10—56ல் காட்டுப்பாடி ஊராண்மைக் கழகப் பணிமனை யில் அவசரக் கூட்டம் நடைபெற் றது. தோழர் கே. வி. கே. சாமி யின் மறைவுக்கு அனுதாபம் தெரி விக்கும் தீர்மானத்தைத் தோழர் வி. ஏ. பகுல் முன்மொழிய, கம் யூனிஸ்டுத் தோழர் ஜி. கணேசன் வழிமொழிந்தார். 5 நிமிட நேரம் கூட்ட நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டு அனுதாபம் தெரி வித்துக் கொள்ளப்பட்டது.

தாராபடவேடு மேலூர் பஞ்சாயத்து :

1—10—56ல், காட்பாடி (வ. ஆ. மா.) தாராபடவேடு மேலூர் பஞ்சாயத்துக் கூட்டம், துணைத் தலைவர் எம். எஸ். அப்துல் கலாம் சாயபு தலைமையில் நடைபெற்ற போது அனுதாபத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

திருவள்ளூர் நகராண்மைக் கழகம் :

29—9—56ல் நடைபெற்றத் திருவள்ளூர் நகராண்மைக் கழகக் கூட்டத்தில், தோழர் டி. ஆர். வரதன் அவர்கள் கொண்டுவந்த அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

'கிடைத்தற்கரிய முத்து சிதறிவிட்டது'

★

கா. அப்பாதுரையார்

"தோழர் சாமி சிறந்தோர் தொண்டர்—சிறந்தோர் தலைவர் தோழர் சாமி மாண்டுபோனார்; என்றாலும் அவர் புகழ் பெரியது —இன்னும் வாழ்கிறது.

"நூற்றுக்குடியிலே 12 ஆண்டு களுக்கு ஒரு முறைதான் முத்துக் குளிப்பார்கள்; வெளியே கொண்டு வரப்படும் சிப்பிகளில் பெரும்பாலா னவை வெறும் சிப்பிகளாகத்தான் இருக்கும்; அவற்றில் நூற்றில் ஒன்றிலோ ஆயிரத்தில் ஒன்றிலோ தான் விலை மதிக்க முடியாத முத்து இருக்கும்; அதுபோலவே தான் தோழர் சாமி ஆயிரத்திலொ ருவர் நூறாயிரத்தில்ஒருவர். தனது மொழி — தனது நாட்டுக்காகப் பணி செய்தவர்; திராவிட இயக் கத்திற்கே அதிகமான உழைப் பைத் தந்தவர்.

"பல துறைகளிலெல்லாம் — பல அரங்கங்களிலெல்லாம் அவர் செல்வாக்குப் பெற்றிருந்தார். அத் தகைய ஒரு ஒப்பற்ற அரிய தொண்டரை நாம் இழந்துவிட் டோம். அவரை இழந்ததினால் ஏற்பட்டுள்ள நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல! எனது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னார் உற்றார், உறவினர், நண்பர்களனைவருக்கும் உரித்தாக்குகிறேன்."

'வாழ்வையே பொதுப் பணிக்கு அர்ப்பணித்த வீரன்'

★

டி. வி. நாராயணசாமி

"கடந்த ஒரு வார காலமாக நாம் திராவிடத்திலே அமைதியாக இருக்க முடியாத தர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். நமது உடல் நிலைகளைக்கூட மாற்றி நம்மைப் படுக்கையில் கிடத் தும் அளவிற்கு வேதனை தரும் செய்தியாக இருக்கிறது தோழர் சாமி அவர்களின் படுகொலைச் சேதி!

"அவர் சுயமரியாதை இயக்கக் காலத்திலும், அதற்குப் பின் தென் னிந்தியர் நலவுரிமைச் சங்கத் திலும், அதன் பின்னர் திராவிடர் கழகத்திலும், அதற்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத் திலுமாக தமது வாழ்க்கை முழுவ தையும் தொடர்ச்சியாக ஒரே இலட்சியத்திற்காக—ஒரே கொள் கைக்காக அர்ப்பணித்தார். அத்தகு ஒரு தொண்டனை இழந்த நமக் கெல்லாம் ஏற்பட்டிருக்கும் வேதனை, வெள்ளம்போலாகிவிட் டிருக்கிறது.

"நாம் இனியும் நிச்சயமாக அவரை அடையமுடியாது; ஆனால் அவரிடம் அடங்கியிருந்த மகத் தான கொள்கையான திராவிட நாட்டைத் திராவிடருக்காக்கும் பணியில் ஈடுபட்டு நமது கெடு நாப் பயணத்தை முடிப்போம். அவர் புகழ் ஓங்கட்டும்! அவர் கொள்கை வெல்லட்டும்! அவர் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

(4-ம் பக்கம் பார்க்க)

தோழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரி வித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித் தரப் பட்டுள்ளன :—

சென்னை—பெத்து நாய்க்கன்பேட்டை :

29-9-56-ல் தோழர் ஜி. எஸ். கணேசன் தலைமையில் நடை பெற்ற மக்கள் மன்றச் செயற் குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை — புதுப்பாக்கம் :

27-9-56 மாலை 6-30 மணியள வில் அண்ணா படிப்பகத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத் தில் தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

திருவனந்தபுரம்:

28-9-56-ல் நகரிலுள்ள தி. மு. கழகத் தோழர்களனைவரும் கருப் புச் சின்னம் அணிந்து இழந்த மரியாதையும் வணக்கமும் செலுத் திக்கொண்டனர்.

திருவில்லிப்புத்தூர்:

23-9-56 மாலை 7 மணிக்கு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத் தில் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

காட்டுப்பாடி (வ. ஆ. மா.):

29-9-56ல் நடைபெற்றக் இளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர்கள் 5 நிமிட நேரம் மௌனமாக இருந்து இழந்த மரியாதை தெரிவித்துக் கொண் டனர்.

சிவகெங்கை :

22-9-56ல் தோழர்கள் மனோ கரன், மணி ஆகியோர் தலைமையில் வாசகம் நடைபெற்று, அரண் மனைவாயிலை அடைந்ததும் தோழர் வெங்கிடசாமி தலைமையில் நடை பெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பழனி :

23-9-56ல், கழகச் சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் தொடங்கி நிலை அடைந்ததும் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் பல கட்சித் தோழர்களும் கலந்து கொண்டனர் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

கம்பாலாகில் (பம்பாய்) :

26-9-56 காலை 9-30 மணியள வில் 'ஏமிலே'யில், தோழர் கே. சுப்பையா தலைமையில் நடைபெற் றது தோழர் சு. வடிவேல், சாமி யின் படத்தைத் திறந்துவைத் துப் பேசினர். மற்றும் பல தோழர் கள் பேசியிருக்கின்றனர், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கல்லார் :

25-9-56ல் நடைபெற்றக் கூட் டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது பல தோழர்கள் பேசினர்.

மேலசின்னம்பட்டி :

இளைக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.

புதுவை—

முதலியார்பேட்டை:

22-9-56ல் கழகக் கொடிகள் எல்லாம் தாழப் பறக்கவிடப்பட் டன 23-9-56 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர்கள் கூடி 3 நிமிட நேரம் மௌனமாக இருந்து இழந்த மரியாதை தெரி வித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பம்பாய் :

25-9-56 இரவு 8-30 மணியள வில் தோழர் டி. எஸ். மாடசாமி தலைமையில் நடைபெற்ற பம்பாய் தென்னிந்திய ஆதி திராவிட மகா ஜன சங்க கிளைகள் குழுக் கூட் டத்தில் அனுதாபத் தீர்மானம்நிறை வேற்றப்பட்டது.

எண்ணூர் :

1—10—56 காலை 10 மணிக்கு எண்ணூர் தி. மு. கழகக் கிளை னால் ஏற்பாடுசெய்யப்பட்ட பகுத்தறி வுப் பாடசாலையில் உள்ள தொழி லாளர் அனைவரும், மற்ற ஆதி தியத் தோழர்களும் 3 நிமிட நேரம் மௌனம் மேற்கொண்டு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தனர்.

விருத்தாசலம்:

28-9-56ல் நடைபெற்ற திரா விட மாணவர் கழகக் கூட்டத் தில் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

பாண்டமங்கலம்:

28-9-56 மாலை சோமசுந்தரம் நிலையில் நடைபெற்றக் கூட்டத் தில், அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தாத்தையங்கார் பேட்டை :

27-9-56ல் நடைபெற்ற இல்லூர் வைத்தறி சேவையாளர் கூட்டமும் உற்பத்தி—விற்பனைக் கழக அனு தாபச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

புதுச்சேரி :

22-9-56 இரவு 8 மணிக்கு கழக உறுப்பினர்கள் கூட்டமும், மறு நாள் மாலை 5 மணிக்கு மௌன ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அனுதாபத் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியா ரூ. 10 லட்சம் செலவிடுமாம்!

புதுடில்லியில் சர்வதேச மாநாடு நடைபெறுவதற்கு ஏற்பாடு

புதுடில்லி, அக். 3—

அடுத்த நவம்பர் 5-ந் தேதி முதல் டில்லியில் சர்வதேச கிறவனத்தின் மாநாடு ஒன்று நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் 76 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளுவர்; வெளிநாடுகளிலிருந்து 1,000 பார்வையாளர்கள் வரக்கூடும்.

இந்த மாநாட்டையொட்டி, இந்திய அரசாங்கம் ரூ 10 இலட்சம் செலவு செய்யுமென்று தெரியவருகிறது.

வெங்கலமுறி தொழிற்சாலை

நவீன முறையில் பயிற்சி அளிக்கத் திட்டம்

தஞ்சை மாவட்டத்தில் நாச்சியார் கோயிலிலும், மலபார் மாவட்டத்தில் மங்குரிச்சியிலும் உள்ள வெங்கலமுறித் தொழிற்சாலையை முன்னேற்றி நல்ல முறையில் இயக்கச் செய்வதற்கு இரண்டு இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் திறக்கப்படும்.

15 தொழிலாளர்களுக்கு நவீன முறையில் இத்தொழில் கற்றுத் தரப்படும்; பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ 30 உதவிச் சம்பளம் அவர்களுக்குத் தரப்படும்; இந்தப் புதிய திட்டத்திற்காகத் துவக்கத்தில் ரூ. 69,600 ஆண்டுதோறும் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

தோட்டக்குறிச்சி:

பிள்ளையார்கோவில் அருகிலுள்ள கே. வி. கே. சாமி மைதானத்தில் 6—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: டி. பி. மூர்த்தி

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

டி. ஆர். முத்துசாமி

என். பி. சாமி

★

திருக்கடையூர்:

5—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. ப. தங்கராசன்

பேசுவோர்:

என். வி. நடராசன்

கி. ஜம்பு

அனுதாபக் கூட்டம்

7—10—56 மாலை 4 மணிக்கு, கொழும்பு, நாராயணகுரு மண்டபத்தில், இலங்கை தி. மு. கழகச் சார்பில், தோழர் இரா. ஆதி மணி தலைமையில், மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமி அனுதாபக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சு. கா. சுந்தரராசன், மு. வே. பெ. சாமி, பி. எம். ஜலால், ஜே சோமசுந்தரம், யோவான் ஆகியோர் பேசுவர்.

பல்வேறு மாநிலங்களில் உள்ள 'கோ சதன'ங்களுக்கு மானிய உதவியாக மத்திய சர்க்கார் இது வரை மொத்தம் ரூ. 3,36,000 வழங்கியிருக்கின்றனர்.

பள்ளி ஆசிரியர்கள் வறுமை மிக்க நிலை

'போதுமான ஊதியம் தருவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்'

பாதுகாப்பு அமைச்சர் கருத்து

திருவனந்தபுரம், அக். 4—

"நாட்டின் நலனுக்காகவே பள்ளி ஆசிரியர்களும் படை வீரர்களும் தங்கள் வாழ்க்கையை ஈடுபடுத்தியிருப்பதால் இவ்விருதுறைகளிலும் பணியாற்றுகிறவர்களைச் சமமாகக் கருதலாம்" என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் கருத்தறிவித்துள்ளார்.

"ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வறுமை மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர்; இவர்களில் பணம் படைத்தோரே இல்லை; இதே நிலைதான் படை வீரர்களுக்கும்," என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"மக்கள் ஆசிரியர்களைக் கௌரவமாக நடத்தவேண்டும்; நல் வாழ்க்கை நடத்தும்பொருட்டு ஆசிரியர்களுக்குப் போதுமான அளவில் ஊதியம் தருவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

'அறிவு வளர்ச்சிக்காகவே பெண்கள் கற்கவேண்டும்'

டாக்டர் இலட்சுமணசாமிகருத்து

பம்பாய், அக். 4—

பெண்களைப் பொறுத்தவரையில் கல்வி அறிவு பெறுவதற்காகவும், அவரவர்களின் அறிவு வளர்ச்சிக்காகவுமே கல்வி கற்கவேண்டும்' என்று எஸ். என். பி. டி. பெண்கள் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

'வேலை பெறுவதற்காகக் கல்வி கற்கலாமென்ற போதிலும் பெண்கள் கல்வி—வீட்டையும், குடும்பத்தையும், சமூகத்தையும், நாட்டையும் சிறப்புடையச் செய்வதற்கான பண்பாட்டைப் பெறுவதற்கான கல்வியாக இருக்கவேண்டும்."

திருத்தம்

சென்னையில் நடைபெற்ற கே. வி. கே. சாமி மெனன ஊர்வலச் செய்தியில், '50 அடி உயரத்தில் கருப்புக்கொடியுடன்கலந்துகொண்டவர்கள் சென்னை 9-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள்' என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

கே. வி. கே. சாமிக்கு அனுதாபம்—3-ம் பக்கத் தொடர்ச்சி

'மக்களுக்காகத் தொண்டாற்றிய மாவீரன்'

★

சத்தியவாணிமுத்து

"நாம் இதுவரை எத்தனை எத்தனையோ மேடைகளில் சந்தித்திருக்கிறோம் ஆனால் இன்று துயரக்கடலில் மிதப்பதுபோல, இக்கே கூடியிருக்கிறோம்.

"தோழர் சாமியை எதிராகச் சென்று என்னதான் தாக்கினாலும் தங்களால் வெற்றிபெற முடியாது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு, பதுபாவிகள் பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு அவரைத் தாக்கிக் கொலை செய்திருக்கின்றனர்.

"சாமி இவ்வளவு பதுகொலைக்கு ஆளாக்கப்படுவதற்கு அவர் செய்த குற்றம்தான் என்ன? மக்களுக்காகப் பாடுபட்டார்—தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டார்—இவையெல்லாம் அவர் செய்த குற்றங்களா? மக்களுக்காகப் பாடுபடுகிறவர்களெல்லாம் இப்படியே கொலை செய்யப்பட்டுக் கொண்டே போனால் மக்களுக்காகவே தங்கள் வாழ்வையே அர்ப்பணிக்கும் மற்றத் தலைவர்கள் எப்படித்தான் வளர முடியும்?

"சாமியின் மறைவு நமது கழகத்தின் அஸ்திவாரத்தையே கலக்கிவைத்தது; நாட்டு நலனில் பற்றும், கட்சிக் கொள்கைக்காகப் பாடுபட்டும் உழைத்த அரியதோர் தோழனை நாம் இழந்தோம்.

"அப்படிப்பட்ட ஒரு இலட்சிய வாதியை இழந்து அனுதாபம் தெரிவிக்கும் இக் கூட்டத்தில் நானும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

'சாமியை நாம் மீண்டும் பெறுவோமா?'

★

எஸ். எஸ். இராசேந்திரன்

"இன்றையத் தினம் இங்கு கூடியிருக்கிற நமது சுருதி குறைந்து விட்டிருக்கிறது. மதுரை கருப்புச் சட்டை மாநாட்டிலிருந்து அவரை நான் கண்டிருக்கிறேன்.

"நாங்கள் நாடகம் ஒன்றுக்காக நாகர்கோவில் செல்லும்போது தோழர் சாமியையும் உடன் அழைத்துச் செல்ல அவரைக் கேட்டிருந்தோம்; அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால் நெல்லையிலே சென்றதும் தோழர் சாமி அவர்களைச் சிலர் தாக்கிக் கையிலே பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையிலே இருப்பதாகவும், ஆகவே தாம் கூறினதுபோல எங்களுடன்வர இயலவில்லை என்றும், நாகர்கோவில் நாடகம் முடிவுற்றதும் அத்தக்குடி வந்து சேருமாறும் கேட்டுக்கொண்டு ஒரு தோழரை அனுப்பியிருந்தார். நாங்களும் நாகர்கோவிலில் நாடகத்தை முடித்துக்கொண்டு அத்தக்குடி சென்றோம். நாங்கள் யாரும் எதிர்பார்க்காத வகையில், கட்டுண்ட கையுடன் தோழர் சாமி இரயில் நிலையம் வந்து எங்களை வரவேற்றக் காட்சியை இன்னும் என்னால் மறக்க முடியாது. இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்ததும் தோழர் சாமியின் கையனைத்தால் எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள் அணிவகுத்து நின்றதைக் கண்டதும், அத்தக்குடி பட்டாளத்தின் தலைவராகவே தோழர் சாமி என் கண்களுக்குத் தென்பட்டார்.

"திராவிடத்தின் தென்பகுதியிலே ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தளபதியாகத் தலைமை வகித்து நடத்திச் சென்ற ஆற்றல் கொண்ட செயல் சிங்கத்தை இழந்தோம்.

"இனிமேல் நாம், இதுபோன்ற சாமியைப்போன்ற ஒரு சாமியை மீண்டும் எப்போது காணப்போகிறோம்? இனிமேலாவினும் நாமெல்லோரும் சாமிகளாக மாறி, கொள்கை உறுதி கொண்டவர்களாக மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

'சாமியின் பணியை நிறைவுபெறச் செய்வோம்'

★

ஏ. வி. பி. ஆசைத்தம்பி:

"நாம் பிறந்து இன்றுவரை சொல்லொணாத வேதனைகளை அடைந்து வந்திருக்கிறோம். நமக்கு வீட்டிலேயே எதிர்ப்பு இருக்கிறது; பள்ளிகளிலே எதிர்ப்பு; மாற்றுக் கட்சியினரின் எதிர்ப்பு; அரசாங்கத்தவரின் அடக்குமுறை—இப்படிப் பல எதிர்ப்புகள் இருந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாகப் பலாத்காரவாதிகளின் எதிர்ப்பையும் திராவிட முன்னேற்றக் கழகம் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

"தோழர் சாமி முழுநேர கட்சி உழைப்பாளி. சாமியைப் போன்ற முழுநேர உழைப்பாளிகளால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பொலிவுற்று விளங்குகிறது. அவரிடம் யார், எந்த நேரம் சென்று உதவி நாடினாலும் உடனே செய்வார். தனது வாழ்நாளின் முழு நேரத்தையும் கட்சி வேலைக்காகவே செலவிட்டு, கட்சியையே தனது உயிராக வைத்திருந்தார்.

"தோழர் சாமி அவர்கள் தமது வாழ்நாளெல்லாம் இலட்சியத்தை அடையப் பாடுபட்டார்; அதுவே தான் அவரது ஆசை; அந்த ஆசையை நாமெல்லாம் ஒன்று சேர்ந்து நிறைவேற்றி வைப்போம் என்று கூறிக்கொண்டு, தோழர் சாமி அவர்கள் மறைவால் வருந்தும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

பண்டிதருக்கு படுதோல்வி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டத்தினர் பெருங்குரல் எழுப்பினர். "பந்தயங்கட்டிக் கொள்ளுங்கள், நவம்பர் முதல் தேதிக்குக் காத்து இருங்கள். அன்று நீங்கள் மீண்டும் ஒரு கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாம்; ஆனால் புனரமைப்புப் பணி தொடர்ந்து செயல்பட்டே தீரும். முழு தேசத்தின் கருத்துக்கு மாறாக நடப்பது என்பதை நீங்கள் நினைக்கக்கூடாது" என்று, பண்டிதர் மேலும் வீராப்பாகக் கூறினர்.

"கடந்த 40 ஆண்டுக் காலமாக நான் பல சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன்; பல விஷயங்களைக் கற்றிருக்கிறேன். இன்றைய அனுபவம் எனக்குப் புதிது ஆகும். நான் அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துகிறேன். இதை நானா என்றும் நினைவில் வைத்திருப்பேன்,"

என்றும் நேரு குழப்பமேலீட்டால் குறிப்பிட்டார்.

குசராத் பல்கலைக் கழகத்தின் 5,000 மாணவர்களிடையே பண்டித நேரு சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில், மகா குசராத் இயக்கத்தினர் கருப்புக் கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இடையிடையே அவர்கள் எழுப்பிய கோஷங்களால், பண்டிதரின் பேச்சு தடைப்பட்டது.

அவர்களைக் கண்டித்துப் பேசுகையில் பண்டித நேரு, 'என்னை எப்போது வேண்டுமானாலும் விரட்டிவிடலாம்; எனக்கு வயதாகிவிட்டது; உலகத்தில் எனக்கு மிகப்பலருக்குக் கிடைக்காத மதிப்பும், அந்தஸ்தும் கிடைத்துவிட்டது. என்னை விரும்பியவர்கள் என்னைப் பதவியில் நீடிக்கச் செய்யலாம்; விரும்பாவிட்டால் விரட்டிவிடலாம்,' என்றார்.

கூட்டத்தில் ஒரு பகுதியினர், 'நேரு நீடூழி வாழ்க' என்று கோஷமிட்டனர்; உடனே நேரு, 'உட்காருங்கள்; என்னைக் குறித்து கவலைப்படவேண்டாம், கடந்த 40 ஆண்டு காலத்தில் எத்தனையோ எற்றத் தாழ்வுகளை என் வாழ்வில் கண்டுள்ளேன்; ஜுங்கிலேய எகாதிபத்தியத்தையே எதிர்த்துள்ளேன் ஆனால், அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும்தான் அதைச் செய்தேன்.

"என்னைப் பலாத்காரத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாது; என் முடிவை மாற்றிக்கொள்ளமாட்டேன். உலகத்திலுள்ள எந்தச் சக்தியும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உருவாக்கப்பட்ட பம்பாய் இருமொழி மாநில அமைப்பை மாற்ற முடியாது"

என்று ஆத்திரத் தொனியுடன் நேரு பேசினர்.

முடிவில் அவர், 'கருப்புக் கொடி காட்டுவது அறிவுச் சூனியமான செய்கையின் எடுத்துக்காட்டு' என்றார்.

10,000 பீடித் தொழிலாளர் தவிப்பு

ஜபல்பூர், அக். 1—

மாகாண அரசாங்கத்தின் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அமுல் செய்யும் சிக்கல்பற்றிப் பீடி தயாரிப்பாளருக்கும் —காண்டிராக்டர்களுக்குமிடையே எழுந்தத் தகராறின் காரணமாக 10,000-க்கு மேற்பட்ட பீடித்தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர்.

பீடித் தொழிலாளர்கள் பீடி தயாரிப்புக்கான கச்சாப் பொருள்களை விநியோகம் செய்வதில்லையாம்; இதன் விளைவாக பீடித் தொழிலாளர் குடும்பங்கள் தவிக்கின்றனவாம்.

தமிழகமெங்கும் அக். 15

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாரத்திற்கு இங்கு வர முடியாது.

"நாள் தந்திருக்கும் 15 நாள் அவகாசத்துள் சென்னை அரசாங்கம் செயல்பட வேண்டும் — டில்லியிடம் பதில் பெறவேண்டும்."

கடல் கடந்த தமிழர் உரிமைக் குரல்!

சுதந்திர மலேயாவில் நிபந்தனை இல்லாத முழு குடியுரிமை-சம வாய்ப்பு அளிக்கக் கோரிக்கை

"மலேயாவில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி ஆக்கப்படவேண்டும்"

என்று மலேயாவிலுள்ள தமிழ் நிலையங்கள் வற்புறுத்தியுள்ளன.

'சுதந்திர மலேயாவில் தமிழ் மக்களுக்கு நிபந்தனையில்லாத முழு குடி உரிமையும், சமவாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும்' என்று ரீட் அரசியல் சட்டக் குழுவிடம், மலேயாவில் உள்ள தமிழ் நிறுவனங்கள் மனுக்கொடுத்துள்ளன.

மலேயாவில் இருக்கிற 109 நிறுவனங்களின்பிரதிநிதிகள் அண்மையில் கூடி, மேற்படி மனுவைத் தயாரித்தார்கள்; 50 இலட்சம் தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்தவை, இந்த நிறுவனங்கள்.

மலேயாவில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் ஆக்கப்படவேண்டும் என்று மனுவில் வற்புறுத்தப் பட்டுள்ளது.

தமிழர்கள் பண்டைய நாட்களிலிருந்து மலேயாவிற்கும், மலேயா மக்களுக்கும் செய்து வந்துள்ள தொண்டு, தியாகம் இவைகளை உத்தேசித்து பிறருடைய உரிமைகளைப் பாதிக்காதவாறு இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

அக். 7: செங்கற்பட்டு — காலை சிறப்புக்கூட்டம்

8: ஆலத்தூடையாம்பட்டி

9: பெருவளப்பூர்

12: 43-வது வட்டம் சென்னை

14: மதுரை

2,70,00,000 பேருக்கு சொந்த வீடுகளாம்!

"15 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் 1,10,00,000 பேருக்குச் சொந்த வீடுகள் இருந்தன; இப்பொழுது 2,70,00,000 குடும்பங்களுக்குச் சொந்த வீடுகள் உள்ளன" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டப்படும் வீடுகளுள் 90 சதவிகிதம் தனிக் குடும்பங்களுக்குரிய வீடுகளாகவும், பத்து சத விகிதம் மட்டும் வாடகைக்கு விடுவதற்காகவும் கட்டப்படுவதால், சொந்த வீடுகள் உள்ளோர் தொகை அதிகமாகிக்கொண்டே போகிறதாம்!

திருச்சியில்

'நம் நாடு' ஏஜெண்டு

எம். வேலாயுதம்,
7, அரசமரத் தெரு,
மலைக்கோட்டை, திருச்சி-2.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.